2024 ஜூன் 29] [பேரவைத் தலைவர்]

சட்டமன்றப் பேரவையின் நிகழ்ச்சிகளை அன்றாடம் சிறப்பாக நேரடி ஒளிபரப்பு செய்ய உதவிய செய்தி-மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு திரைப்பட பிரிவினருக்கும், ஒலிவாங்கிகளை இயக்கும் பொதுப் பணித் துறையின் ரேடியோ பிரிவினருக்கும், சட்டமன்ற நிகழ்வுகளை சிறந்த முறையில் மக்களுக்கு எடுத்துச் சென்ற அகில இந்திய வானொலி, தனியார் தொலைக்காட்சிகள், நாளிதழ்கள், பத்திரிகைகள், ஊடகங்கள், சமூக வலைதளங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள், நிருபர்கள் மற்றும் புகைப்பட கலைஞர்கள் என அனைவருக்கும் எனது நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கிய அனைத்துப் பேரவைக் காவலர்களுக்கும் பேரவையின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், ஏதேனும் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) அரசினர் தீர்மானம். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள், அலுவல்களெல்லாம் முடிந்துவிட்டன. அரசினர் தீர்மானம். (குறுக்கீடு) அதற்கு முன்னால், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஏதேனும் சொல்ல விரும்பினால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *வேறொன்றுமில்லை. தீர்மானம்தான். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. உட்காருங்கள்.*

10. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பேரவை விதி 25(1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

14. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

130. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் வசதியாக்க மன்ற விதிகளை இயற்றியது குறித்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (எப்) துறையின் 19-7-2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 46-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் (மத்திய சட்டம் 27/2006) 30(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

131. 24-10-2016 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்-II பிரிவு-2 இல் வெளியிடப்பட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் II(2)/MAWS/687(C-1)/2016 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 1-9-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 62-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு